தற்போது இந்த வழக்கில் எதிரிகளைக் கைது செய்யக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் சுமார் 300 பேர், தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகம் அருகில் 7-5-2012 அன்று உண்ணாவிரதம் தொடங்கினர். 9-5-2012 அன்று இது தொடர்பாக உண்ணாவிரதம் இருந்தவர்களுடன், எனது உத்தரவின்பேரில் மாவட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதில், நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், தூத்துக்குடி மற்றும் கோவில்பட்டியில் பெட்ரோல் பாட்டில்கள் வீசப்பட்ட வழக்குகள் மேல் விசாரணைக்கு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றுவதற்கு பரிந்துரை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டதன்பேரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

இந்த இரண்டு வழக்குகளும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-30

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை*

2012 மே 10] *[பேரவைத் தலைவர்]*

அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) இந்திய முத்திரை (தமிழ்நாடு மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*